DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.12/2024**

**2024-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | விவசாயம் |
| பெயர் | - | ஜோதி | வட்டம் | - | |
| க/பெ | - | பெரியசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | கல்லக்குறிச்சி | வயது | - | 48 |
| சாதி | - | | | | |

**13.11.2024**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1.நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 06.05.2023-ம் தேதி அன்றுகோயம்புத்துார் ஒத்தக்கால்மண்டபத்தில் வீட்டு வேலை செய்து கொண்டிருந்தேன் அங்கு தங்கி எனது மகன்களை படித்துவைத்துக்கொண்டிருந்தேன். அங்கு காலை 05.00 மணிக்கு நான் வீட்டு வேலைக்குசென்றுவிட்டேன். எனது மகன் கார்த்திக், மற்றும் எனது மகனின் நண்பர்கள் சூரியா, ரகு மற்றும் சரண் ஆகியோர் எப்போது வால்பாறைக்கு வந்தார்கள் என்று தெரியாது. மாலை 06.30 மணியளவில் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை ஆம்புலன்ஸ்சில் ஓட்டுநர் போன் செய்து எனது மகன் கார்த்திக்கு வண்டியில் இருந்து விழுந்து அடிபட்டு மருத்துவமனையில் இருப்பதாக தகவல் தெரிவித்தார். நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது எனது மகன் இறந்த நிலையில் இருந்தான். ஸினுபாலா என்ற எனக்கு தெரிந்தவர் என்னிடம் வந்து கையெழுத்து கேட்டார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அதை நான் படித்துப்பார்க்கவில்லை. **(புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் ஆஜர் எதிரிசூரியாவிடம் விசாரித்தபோது எனது மகனும் சூரியாவும் இரு சக்கரவாகனத்தில் வால்பாறையில் இருந்து இறங்கிவந்தபோது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார். அதில் சூரியாவிற்கு காயம் ஏற்படவில்லை. எனது மகனுக்கு கால் உடைந்து நெஞ்சில் அடிபட்டதாக தெரிவித்தார். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 06.05.2023-ம் தேதி மாலை 06.30 மணியளவில் வால்பாறை டு பொள்ளாச்சி மெயின்ரோடு வாட்டர்பால்ஸ் 29-வது கொண்டை ஊசி வளைவு அருகே இரு சக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி ஓட்ட எனது மகன் கார்த்திக் பின்னால் உட்கார்ந்து கொண்டும் மற்றொரு பைக்கில்

ரகுவும் , சரண்ணும் முன்னும் பின்னுமாக வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார்கள் என்றும் அப்போது சூரியா பைக்கை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் திரும்பும்போது பைக்கானது நிலை தடுமாறி சறுக்கி கீழே விழுந்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

2. பைப்பிள் பின்னால் அமர்ந்துவந்த கார்த்திக் தூக்கிவீசப்பட்டு ரோட்டின் அருகில் இருந்த முக்கோண வடிவு இரும்பு போஸ்டில் மோதியதில் கார்த்திக் மார்பிலும் வலது காலும் பலத்த காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. காயம்பட்ட கார்த்திக்கை அவரது நண்பர்கள் அருகில் உள்ள வாட்டர்பால்ஸ் எஸ்டேட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துசென்று முதலுதவி சிகிச்சை செய்து மேல்சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக கேள்விப்பட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை கேள்விப்பட்டு நான் காடம்பாறை காவல் நிலையம் வந்து விபத்து குறித்து புகார் அளித்தேன் என்றுசொன்னால் சரியல்ல.

3. பின்னர் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது மகனை பற்றி கேட்டபோது அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார் என்று சொன்னால் சரியல்ல. இது சம்பந்தமாக வால்பாறை காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் எதிரி தனது மகனின் நண்பர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டும் என்று எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும், பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1.எனது மகன் கார்த்திக் கார் அடிபட்டு விபத்து ஏற்பட்டதாக எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் விபத்து ஏற்பட்ட மறுநாள் 07.05.2023-ம் தேதி காலை 10.00 மணிக்கு தெரியும். இந்த விபரத்தை நான் ஏன் வால்பாறை காவல்நிலையத்திற்கு தெரிவிக்கவில்லை என்றால் என் மகன் இறந்த அதிர்ச்சியில் என்ன செய்வது என்று எனக்கு தெரியவில்லை.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.